Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

வேணு : 18 | ஜனவரி 2013 | கானம் : 6



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

ஸ்ரீ ஹரி:


தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 18 | ஜனவரி 2013 | கானம் : 6

Delivered by India Post www.indiapost.gov.in



18.12.2012 - 27.12.2012 மதுரபுரி ஆஸ்ரமம்
அத்யயன உத்ஸவம் - ஸ்ரீப்ரேமிகவரதன் புறப்பாடு



24.12.2012 வைகுண்ட ஏகாதசியன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில்



ஸ்ரீகல்யாண ஸ்ரீநிவாச பெருமாள் திருக்கோவிலில்
நாமகீர்த்தனம் செய்யும் சிறார்களுடன்



25.12.2012 த்வாதசியன்று மதுரபுரி ஆஸ்ரமத்தில்
உஞ்சவ்ருத்தி ஸ்ரீ ஸ்ரீகாந்த் [illegible] பாகவதர்



22.12.2012 தூத்துக்குடியில் நகர சங்கீர்த்தனமும்
நாமத்வாரில் சத்சங்கமும்



9.12.2012 Redding California USA - கோபகுமார் குழந்தைகளின் சோமேளா நாடகம், ராமானுஜம்ஜி சான்றிதழ் வழங்குதல்



21.12.2012 தெய்வத்தமிழ் இசைவிழா துவக்கம் மஹோதயா ஹால், அசோக் நகர், சென்னை - நீதியரசர் ஸ்ரீ TS.அருணாசலம் அவர்கள் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம், திருவண்ணாமலை



மங்கையர்க்கரசி உயர்நிலை பள்ளி - மதுரை : 26-30-11-2012
மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - முரளிஜி



25.12.2012 - தெய்வத்தமிழ் இசைவிழா
சத்சங்க குழந்தைகளின் "வள்ளி கல்யாணம்" நாடகம்

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 18 ஜனவரி 2013 கானம்: 6

**வாசகர்களுக்கு மதுரமுரளியின் இனிய ஆங்கில புத்தாண்டு மற்றும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் கல்பதரு தின வாழ்த்துக்கள்!**

இந்த இதழில் ...


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 202 | 3 | ஆலய தரிசனம் | 30 |
| ஸ்ரீகிருஷ்ணனும் வருவான் | 10 | பாலகர்களுக்கு ஒரு கதை | 32 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 | ப்ருந்தாவன கண்ணன் | 38 |
| பாகவத பழம் - 34 | 13 | மாலே மணிவண்ணா | 40 |
| காஞ்சி மஹாஸ்வாமிகளின் கருணை | 16 | அப்பாலுக்கு அப்பால் | 42 |


இஷ்டாபூர்த்தானி கர்மாணி ஸுபஹூ^6ணி க்ருதான்யபி
பவஹேதூனி தான்யேவ ஹரேர் நாம து முக்திதம்

**–போதாயன மஹரிஷி ஸூ^6த்ரம்**

பல யாகங்கள் செய்தல், குளம் வெட்டுதல், கோயில் கட்டுதல் முதலிய பல தர்மங்களை செய்தாலும், மனிதர்களுக்கு மறுபிறப்பு உண்டு. அவர்களின் தர்மத்தின் தரத்திற்கு ஏற்றபடி பதவி கிட்டும். ஆனால் ஹரி நாமத்தை ஜபிப்பவர்களுக்கோ எனில், மறுபிறப்பே இல்லை. மோக்ஷம் கிட்டி விடும் என்பதுதான் இதன் பொருள். எனவே, நாம் நிறைய ஹரி நாமத்தை ஜபம் செய்ய வேண்டும். ஹரி நாமத்தை ஜபம் செய்ய விடாமல் எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல், பகவானை வேண்டிக்கொண்டே, தொடர்ந்து ஹரி நாமம் ஜபம் செய்து வர வேண்டும்.

# ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் கீர்த்தனம்

ராகம் : வஸந்தா ரூபக தாளம்

பல்லவி

ராதை என் தாய் கண்ணன் என் தந்தை
ராதா க்ருஷ்ண பக்தர்கள் என் சொந்தம்

(ராதை)

அனுபல்லவி

ப்ருந்தாவனமே எந்தன் ஊர்
கோலோகமே எந்தன் பூர்வீகம்

(ராதை)

சரணம்

பாகவத குலம் என் குலம்
சரணாகதி என் கோத்ரம்
நாமகீர்த்தனம் என் தொழில்
முரளீதரன் அருள் பரிபூர்ணம்

(ராதை)

* பிறர் துயர் கண்டு, தன்னலமில்லாமல் செய்யப்படும் பிரார்த்தனைகள்தான் மனதின் கவிதைகள். இந்த கவிதைகள் பகவானுக்கு மிகவும் பிரியமானவை.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# மதுரமான மஹநீயர் - 202

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நிரம்பிய ஆம்பூர், நமது பாரத தேசத்திற்கு அன்னிய செலாவணியை பெருமளவில் ஈட்டி தருகின்ற முக்கிய நகரங்களில் ஒன்று. ஆம்பூர் திரு.விஸ்வநாத முதலியார், சுதந்திர போராட்ட தியாகிகளுள் ஒருவர். இவரது புதல்வர் நம் சத்சங்கத்தை சேர்ந்த திரு.குமரேசன். திரு.குமரேசனின் நெருங்கிய நண்பர் திரு.மோகன்குமார்.

இளம் வயதில் மளிகை கடை நடத்தி வந்த திரு.குமரேசன், பின்னர் மாலைமுரசு, தினமலர், தினகரன் போன்ற பல நாளேடுகளில் சுமார் 30 ஆண்டுகாலம் ஆம்பூர் பகுதியில் நிருபராக பணி ஆற்றினார். திரு.மோகன்குமாரும் ஆம்பூரில் சொந்தமாக கடை வைத்திருக்கிறார். குமரேசனும் அவருடைய நண்பர் மோகன்குமாரும் இணைந்து ஆன்மீக பேரவை ஒன்றை நடத்தி வந்தனர். ஆம்பூர் ஸ்ரீநாகநாத ஸ்வாமி திருக்கோயிலில் பிரதி வருடம் பத்து நாட்களுக்கு சிறந்த பல ஆன்மீக சொற்பொழிவாளர்களை வரவழைத்து, பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தனர். நிகழ்ச்சிகள் இப்படி நடத்துவது, நடுவில் ஒரு சில வருடங்கள் தடைப்பட்டது.

கடந்த 2002ஆம் ஆண்டு ஒருநாள், திரு.மோகன்குமார் அதிகாலை தொலைக்காட்சியில் குருநாதரின் அருளுரையை கேட்டார். உடனே தன் நண்பர் குமரேசனுக்கு போன் செய்து நிகழ்ச்சியை பார்க்கும்படி கூறினார். பார்த்த இருவருக்கும் குருநாதரின் உபன்யாசம் மிகவும் பிடித்துப்போய் விட்டது. அதனால், தடைபட்டு இருந்த, ஆன்மீக நிகழ்வுகளை குருநாதரை கொண்டு மறுபடி துவங்க வேண்டும் என்று இருவருக்கும் ஆவல் மிகுந்தது. அதனை தொடர்ந்து இருவரும் குருநாதரை தொடர்பு கொண்டு, கடந்த 2002, ஆகஸ்டு 18ஆம் தேதி சென்னை ப்ரேமிக பவனத்தில் குருநாதரை தரிசனம் செய்தனர்.

அப்பொழுது குமரேசனும் மோகன்குமாரும் குருநாதரிடம் ஆம்பூரில் உபன்யாசம் செய்ய வேண்டுமென விண்ணப்பித்தனர். அப்பொழுது குருநாதர் குமரேசனை பார்த்து "உங்களுக்கு என்ன தொழில்?" என்று வினவி இருக்கிறார். "பத்திரிக்கை நிருபராக உள்ளேன்" என்று கூறியுள்ளார் குமரேசன். "நிருபரான உங்களுக்கு எப்படி ஆன்மீக நாட்டம் வந்தது?" என குருநாதர் கேட்டுள்ளார்கள். அதற்கு குமரேசன் "நான் ஆன்மீக நிகழ்வுகளை நடத்துவதில் நிம்மதி அடைகிறேன்" என்று பதில் சொன்னார். இது கேட்ட குருநாதர் "சரி, என்னை ஏன் ஆம்பூரில் சத்சங்கம் நடத்த அழைக்கிறீர்கள்" என கேட்டிருக்கிறார்கள்.

அதற்கு குமரேசன், "நீங்கள் பேசுகின்ற பாங்கு, அதன் எளிய நடை, வசீகரிக்கின்ற பார்வை எங்களை கவர்ந்தது. அதனால் உங்களை அழைத்தோம்" என கூறி விட்டு, தாங்கள், ஆம்பூரில் பத்து நாட்கள் உபன்யாசம் செய்ய வேண்டும் என்றும் கேட்டு கொண்டார். அதற்கு குருநாதர், "முதலில் ஒருநாள் வருகிறேன். பிறகு பார்க்கலாம்" என கூறி விட்டார்.

கடந்த 2002 நவம்பர் 11, 2002 அன்று, குருநாதர் அவர்கள் ஆம்பூர் வருகை தந்து, உபன்யாசம் செய்தார்கள். ஆம்பூரில் ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற்ற, இந்த சத்சங்கத்தில் கலந்து கொண்ட பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும் இது ஒரு வரப்ரசாதமாய் ஆயிற்று. குருநாதர் பேசினால், எப்பொழுதுமே கேட்பவரின் மனதில் உறங்கி கிடக்கும் பக்தி உணர்வுகள் எழும்பி விடும். அவரது பேச்சுக்கு இயற்கையாக அந்த சக்தி இருப்பது, உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக தெரியும். இதற்கு முன் ஆம்பூரில் பலர் பேசி இருக்கின்றனர். ஆனால், குருநாதர் உபன்யாசத்தை கேட்டவுடன், இப்படிப்பட்ட உயிரோட்டமான, ஆன்மீக உணர்வுகளை தட்டி எழுப்பும் பேச்சை, தாங்கள் கேட்டதே இல்லை என்று, கேட்ட ஜனங்களுக்கு புரிய நாளாகவில்லை.

குருநாதரின் உபன்யாசம் கேட்டவர்கள் பலர், குமரேசனிடமும் மோகன்குமாரிடமும், "என்ன ஒரு அழகாகவும் ஆழமாகவும் பேசுகிறார். இவரை கொண்டு, மேலும் நீங்கள் சத்சங்கம் ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொல்லியவாறு

இருந்திருக்கின்றனர். குமரேசனுக்கும், மோகன்குமாருக்குமே அதே எண்ணம்தான். அதனால், குருநாதரிடம் பத்து நாட்கள் ஆம்பூரில் சத்சங்கம் செய்ய தேதி தாருங்கள் என குமரேசன் கேட்டிருக்கிறார். அதற்கு குருநாதர், "மதுரபுரி ஆஸ்ரமத்தில் உள்ள ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் ஆலயத்தின் 2ஆம் ஆண்டு விழா நடக்க உள்ளது. விழாவிற்கு வாருங்கள். தேதியை தருகிறேன்" என கூறிவிட்டார். அதன்படி ஆஸ்ரமம் வந்து விழாவில் கலந்து கொண்ட ஆம்பூர் அன்பர்களிடம், குருநாதர், "ஐந்து நாட்கள் ஆம்பூருக்கு வருகிறேன்" என ஒப்புதல் தந்தார்கள். அப்படியே 2003 ஏப்ரலில், ஆம்பூருக்கு விஜயம் செய்து, ஐந்து நாட்கள் ஆம்பூரிலேயே தங்கி சத்சங்கம் நடத்தினார்கள்.

அந்த நாட்களில், பகல் நேரத்தில் வாணியம்பாடி அருகிலுள்ள சங்கராபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி அதிஷ்டானம், குடியாத்தம் அடுத்த பள்ளிகொண்டா ஸ்ரீரங்கநாதர் ஆலயம் போன்ற தலங்களுக்கு குருநாதர் சென்று வந்துள்ளார்கள். அதே சமயம், குடியாத்தம் அருகே உள்ள மீனூர் மலைக்கு குருநாதர் சென்ற பொழுது, அங்குள்ள பொதுமக்களும் பக்தர்களும், "இங்குள்ள பெருமாளுக்கு மகாகும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என பல ஆண்டுகாலமாக முயற்சி செய்து, போதிய பணமும் திரட்டி வைத்து இருக்கின்றோம். ஆனால் கும்பாபிஷேகம் நடத்த முடியவில்லை. இது ஏன் என்று தெரியவில்லை. கவலையாக உள்ளது" என கூறி வருத்தப்பட்டு உள்ளனர்.

இதை கேட்ட குருநாதர், உடனே ஒரு சில நிமிடங்கள் கண்ணை மூடி தியானம் செய்தார்கள். பின்னர், "இந்த மலை அடிவாரத்தில், மிகவும் பழமையான ஆஞ்சநேயர் கோயில் ஒன்று இருந்ததா? அங்கு, அந்த ஆஞ்சநேயர் பசியால் வாடிக்கொண்டு இருக்கிறார்" என பதில் பகர்ந்தார்கள். குருநாதர் கூறியதை கேட்ட அங்கிருந்த பொதுமக்கள், "இவ்வளவு நாட்களாக இங்கு நாங்கள் இருக்கிறோம். நாங்கள் ஒரு கோவிலையும் பார்த்தது இல்லையே?" என்று கூறி உள்ளார்கள். அப்படியா! என்று, ஒவ்வொருவரிடமும் குருநாதர் கேட்டுக்கொண்டே

இருந்திருக்கிறார்கள். அப்புறம், "சரி. பார்ப்போம்! என்னை பின் தொடர்ந்து வாருங்கள்" என சொல்லி, அனைவரையும் அழைத்து கொண்டு குருநாதர் மலை அடிவாரம் வந்தார்கள். ஓர் அடர்ந்த முள்புதரை காண்பித்து, குருநாதர், "இங்கு உள்ள முட்களை அகற்றுங்கள். ஆஞ்சநேயரை காட்டுகிறேன்" என கூறி உள்ளார்கள். பொதுமக்களும், உடனே மண்வெட்டியை எடுத்து வந்து, அந்த புதரை அகற்றினார்கள். என்னே அதிசயம்? அங்கே மிகவும் பழமையான ஓர் ஆலயத்தில், ஆஞ்சநேயர் சிலையும், ஓர் மகானின் அதிஷ்டானமும் கண்டு வியந்து போனார்கள். அப்போது அங்கு இருந்த குமரேசன் குருநாதரின் பெருமையை கண்டு ஆச்சரியப்பட்டார். இப்பேர்ப்பட்ட மகத்தான சக்தி வாய்ந்தவர், மிக எளிதான தோற்றம் கொண்டு, நமக்கு குருவாக கிடைத்துள்ளாரே என்று சந்தோஷமும் அடைந்தார். அப்பொழுதிலிருந்தே, குருநாதர் மீது அன்புடனும், தீவிர பக்தியுடனும் குமரேசனும் மோகன்குமாரும் இருந்து வர ஆரம்பித்தனர்.

குருவின் நிழலில் இருப்பவருக்கு, தீர்க்க முடியாத கஷ்டம் என ஒன்றுமே இல்லை. குமரேசன் தன்னுடைய மகளுக்கு பார்வை குறைபாடு இருந்ததால், எப்படி திருமணம் நடத்துவது என கவலை கொண்டு குருநாதரிடம் கூறி உள்ளார். அதற்கு, "கவலைப்படாதே திருமணம் கைகூடும்" என ஆசீர்வாதம் செய்து அனுப்பினார் குருநாதர். குருநாதர் கூறியபடி, அடுத்த ஆண்டே, குருநாதரின் ஆசியோடு அவர் மகளுக்கு திருமணம் நடந்தது. அவர் மனைவி திருமதி ஜோதிகுமரேசன், மகன் திருமணத்திற்காக, குருநாதரிடம் பிரார்த்திக்க, மகனுக்கும், குருவருளால், விரைவில் திருமணம் நடைபெற்றது.

ஒருசமயம், "மகள் ஸ்ரீதேவிக்கு குழந்தை பிறந்துள்ளது, தங்களை தரிசித்து ஆசி பெற வேண்டும்" என கேட்டுள்ளார் குமரேசன். குருநாதரும், ஒருநாள் காலை, ஆஸ்ரமம் வருமாறு கூறியுள்ளார்கள். தவிர்க்க முடியாத காரணத்தினால், அந்த தினத்தன்று, குமரேசன் மதியம்தான் சென்றுள்ளார். யார் ஆஸ்ரமத்திற்கு வந்தாலும், எப்பொழுதுமே, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் வயிறார சாப்பிட்டார்களா என்று விசாரித்து, கவனிப்பது

வழக்கம். சின்ன குழந்தையுடன் ஒரு தாயார் வந்தால், "பால் கொடுக்க சொல்" என்பார்கள். ப்ரேமிகவரதன் பூஜையில் எவ்வளவு நேரம் ஆழ்ந்திருந்தாலும், யாராவது சாப்பிடாமல் இருந்தால், அவர்களிடம் சாப்பிட்டாயா என்று விசாரிக்காமல் இருக்க மாட்டார்கள். யாராவ து சாப்பிடாமல் சென்று விட்டாலோ, மறுமுறை அவர்கள் வருகையில் "சென்ற முறை சாப்பிடாமல் சென்று விட்டாயோ" என்று ஞாபகத்துடன் கேட்பார்கள். இது அன்பர்களுக்கு நன்கு தெரியும்.

திரு.குமரேசன் வருவதை பார்த்தவுடன் குருநாதர், திரு.பம்மல் பாலாஜியிடம், "குமரேசன் வந்து இருக்கிறார். அவர் பசியோடு இருக்கிறார். அவரை சாப்பிட வைத்து அழைத்து வா" என கூறி உள்ளார்கள். குமரேசன் "குருநாதரை தரிசித்து விட்டு, சாப்பிட வருகிறேன்" என கூறியிருக்கிறார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களோ, "நீ சாப்பிட்டு வரும் வரை காத்து இருக்கிறேன்" என பதில் சொல்லி விட்டார்கள். குருநாதர் கூறியதை தட்ட முடியாமல் சாப்பிட சென்ற குமரேசன், குருநாதரின் தாயுள்ளத்தில் உருகிப் போனார்.

குருநாதராலும் மகாமந்திரத்தாலும் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களும், ஆச்சரியங்களும் எண்ணிலடங்காது என்கிறார் குமரேசன். ஆம்பூர் அடுத்த மாச்சம்பட்டு கிராம மக்களுக்கு தெரியாத, ஒரு மகானின் அதிஷ்டானத்தை அடையாளம் காட்டியது (இது பற்றிய விபரங்கள், ஜனவரி 2009 மதுரமுரளியில் வெளியாகி இருந்தது), ஆம்பூர் அடுத்த வடபுதுப்பட்டு சர்க்கரை ஆலை எதிரில் உள்ள ஞான மலை முருகன் கோவில் திருப்பணியும், கும்பாபிஷேகமும் நடைபெறாமல் தடைபட்டு கொண்டிருக்கும் காரணத்தை உணர்த்தியது என அதிசய சம்பவங்களை, சொல்லிக்கொண்டே போகலாம் என்கிறார் குமரேசன்.

படிப்படியாக குமரேசன் மற்றும் மோகன்குமாருக்கு குருநாதர் மேல் அபார நம்பிக்கை ஏற்பட்டது. சாதாரணமாக யாராவது குருநாதரை தங்கள் ஊருக்கு அழைக்க வேண்டும், அவரருள் பெற வேண்டும் என்று குமரேசனிடம் வேண்டுகோள் விடுத்தால், அவரே பதில் சொல்லி விடுவார். "மஹாமந்திரம்

சொல்லுங்கள். குருநாதர் உங்களை தேடி, ஓடி வருவார். நாமம் சொன்னால் அழைக்காமலேயே வருவார்'' என்று சொல்லி விடுவார்.

ஒருமுறை ஆம்பூரை சுற்றி கடும் வறட்சி ஏற்பட்டது. பயிர்கள் கருகின. "நீரின்றி அமையாது உலகு'' அல்லவா? குமரேசனும் மோகன்குமாரும் குருநாதரிடம் மழையே இல்லாமல் வறட்சி நிலவுவதை எடுத்து சொல்லி, பிரார்த்தனை செய்தனர். ஸ்ரீஸ்வாமிஜி உடனே "ஒன்று கூடி அகண்டமாய் மகாமந்திரம் கூறுங்கள். மழைபொழியும்'' என அருளினார். காலை 6மணிக்கு நாமகீர்த்தனம் ஆரம்பித்தது. மழை வரும் அறிகுறியே இல்லை. மதியம் சுள்ளென்று வெயில் அடித்தது. குமரேசனுக்கும் மோகன்குமாருக்கும், குருநாதர் சொல்லி ஒன்றை செய்தால், அது பலன் தந்தே தீரும் என்று நிச்சயமாக தெரியும். "நாமகீர்த்தனம் இன்றோ நாளையோ மழையை தரத்தான் போகிறது. ஆனால் உடனிருந்து கீர்த்தனம் செய்வோர் நம்ப வேண்டுமே? நாளை மழை வரும் என்றால் நம்புவார்களா?'' என்று அவருக்குள் கேள்வி எழுந்தது. அவர் எனக்கு தொலைபேசியில் "மாலைக்குள் மழை வந்தே தீர வேண்டும் என்று குருநாதரிடம் சொல்லுங்கள்'' என்று சொன்னார். அதை கேட்ட ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களோ, "கவலையே வேண்டாம்; மழை வந்தே தீரும்'' என்றருளினார்கள்.

மாலை கீர்த்தனம் முடிக்கும் வேளையில், ஆம்பூரில் மழை மட்டும் வரவில்லை; தினமும் மழை பொழிந்து தள்ளி, காணாற்றில் வெள்ளமே வந்துவிட்டது. சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரத்தில், ஒருமுறை மழையின்மையால் மக்கள் தவிக்க, அவர் "வையகம் முழுதும் மாமழை மறந்து'' என்று திருப்புன்கூர் சிவலோக நாதஸ்வாமி மேல் பதிகம் பாடினார் என்றும், பெய்த மழை வெள்ளம் போல திரண்டு வந்தது என்றும் இருக்கிறது. வெள்ளத்தை நிறுத்தவும் பாடியதாக வரலாறு சொல்கிறது. அது போன்ற இறைவனின் லீலை, நம்மிடையே நடக்கையில், மகிழ்ச்சியும் ஆனந்தமும் வருகிறது அல்லவா!

திருமணமாகி ஆறு ஆண்டு காலமாக எவ்வளவோ வைத்தியம் பார்த்தும், ஒரு பெண்மணிக்கு குழந்தை பேறு

இல்லை. அவருக்கு குருநாதர் ஆசீர்வாதம் செய்து, "உனக்கு குழந்தை பேறு கிட்டும்" என்று சொல்லி பழம் கொடுத்தார்கள். அந்த பெண்ணிற்கு பூரண நம்பிக்கை இல்லை; இருப்பினும், குருநாதர் பிரசாத மஹிமையால், சில மாதங்களில் கருவுற்று, இரட்டை குழந்தைகளை ஈன்றெடுத்தார் அவர். சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக காணாமல் போன ஒரு சிறுவன் கண்டுபிடிக்கப்பட்டது, மாடியில் இருந்து கீழே விழுந்து மருத்துவர்களால் கைவிடப்பட்ட ஒரு சிறுமி உயிர் பிழைத்தது என பலப்பல சம்பவங்களை சொல்கிறார் குமரேசன். குருநாதர் பிரசாதமும், மஹாமந்திரமும், நவீன கால விஞ்ஞானத்தினால் முடியாது என்பதை கூட, நடத்தி காட்டி இருப்பதை கண்கூடாக பார்த்துள்ளதாகவும் சொல்கிறார்.

குருநாதர் மீது அன்பும் பக்தியும் கொண்ட குமரேசனும், மோகன்குமாரும் குருநாதருக்கு மிகவும் பிடித்த மஹாமந்திர நாமஜபத்தையும் சத்சங்கத்தையும் ஆம்பூரில் நடத்தி வருகின்றனர். முன்னோர்கள் செய்த பாக்கியம், முற்பிறவிகளில் செய்த புண்ணியம் ஆகியவை சேர்ந்து தாயுள்ளம், கருணை, அன்பு, அரவணைப்பு நிறைந்த ஒப்பிலா உத்தம குருநாதர் நமக்கு கிடைத்துள்ளார் என்று ஆனந்தப்படுகிறார் குமரேசன். தந்தையை போலவே அவருடைய மகன் காமராஜ், ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்ற சத்சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, கைங்கரியமும் செய்து வருகின்றார். தனக்கு கிடைத்த பாக்கியம், பிறருக்கும் கிடைக்க வேண்டும் என எப்பொழுதும் பிரார்த்திக்கின்றார் நம் ஆம்பூர் குமரேசன்.

முன் அட்டை – காஞ்சி மஹாஸ்வாமிகள் – ஜனவரி 8 – மஹாஸ்வாமிகளின் ஆராதனை தினம்
பின் அட்டை – மதுரபுரி ஆஸ்ரம நாராயண சரஸில் ஸ்ரீஸ்வாமிஜி



# ஸ்ரீகிருஷ்ணனும் தேடி வருவான் !

–குள்ளஹரி

நம் ஸ்வாமிஜி அவர்கள், மதுரபுரி ஆஸ்ரமத்தில் தொடர்ந்து சில நாட்கள், தங்கி இருந்தார். வெளியில் எங்குமே செல்லவில்லை. நானும் ஆஸ்ரமத்திலேயே தங்கி இருந்தேன். ஸ்ரீப்ரேமிகவரதன் சன்னிதியில் அமர்ந்து, மஹாமந்திர கீர்த்தனம் செய்து கொண்டே இருப்பேன். என்னால் அந்த சமயங்களில் மிகவும் அதிகமாக கீர்த்தனம் செய்ய முடிந்தது.

சில நாட்கள் இப்படியாக சென்றது. நாளாக நாளாக, நான் யாராவது ஒருவர், ஸ்ரீஸ்வாமிஜியை பார்க்க வந்து நாளாகி விட்டதே என்று நினைத்தால் போதும், அடுத்த நாள், அவர்கள் வந்து விடுவார்கள். இப்படி ஒன்றிரண்டு நாள் நடந்தால், தற் செயல் என்று சொல்லலாம். ஆனால், அடுத்தடுத்து அப்படியே நடந்து வந்தது.

அதோடு மட்டும் அல்லாமல், ப்ரேமிக வரதனுக்கு செண்பக பூ சாற்றினால் நன்றாக இருக்குமே என்று நினைத்தால் போதும். மாலையில் அந்த பூவுடன், யாராவது தரிசனத்திற்கு வருவார்கள். ஒருநாள், நான் தனிமையில் அமர்ந்து "என்ன இது விந்தையாக உள்ளதே! நாம் யாரை நினைக்கின்றோமோ, அவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக வந்து கொண்டிருக்கின்றார்களே என்று சிந்தனை செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது என் உள்ளிருந்து குருநாதரின் குரல் கேட்டது. அந்த குரல் என்ன சொல்லிற்று தெரியுமா?

"நீ நினைக்கும் பக்தர்கள் மட்டும்தான் வருவார்கள் என்று நினைக்காதே! இப்படியே தீவிரமாக சிரத்தையுடனும் பக்தியுடனும் கிருஷ்ணனையே நினைத்து மஹாமந்திர கீர்த்தனம் செய்து கொண்டிரு. பகவான் கிருஷ்ணனும் உன்னை தேடி வந்து விடுவான்" என்பதே அது!



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: **EGO**வை அடையாளம் கண்டுபிடித்து அழிப்பதற்கு ஒரு நல்ல வழி சொல்லுங்களேன்

பதில்: **EGO**வை அழிப்பது என்பது அவ்வளவு எளிதான விஷயம் அல்ல. ஆனால், நல்ல விஷயங்களில் ஈடுபடும்பொழுது, வெட்கம் வந்து அதை தடுக்குமானால், அந்த கணமே அதை அடையாளம் கண்டு அந்த வெட்கத்தை உதறி தள்ளி விட்டு, அந்த நல்ல காரியத்தை செயல்படுத்த வேண்டும்.

அதுபோல், ஏதாவது ஒரு நல்ல காரியத்தை செயல்படுத்தும்பொழுது, உன் மனதில் நாம் இதை செய்வதா? நம் கௌரவம் என்னாவது என்று எண்ணம் வருமானால், உடனே அதை தள்ளி விட்டு, அந்த நல்ல காரியத்தை செயல்படுத்த வேண்டும்.

இப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக, நம்மை முன்னேற்ற பாதையில் செல்ல விடாமல் தடுக்கும் **EGO**வை அடையாளம் கண்டு, அது மேலும் வளர்வதற்கு இடம் கொடுக்காமல், அது உதயம் ஆகும்பொழுதே, அதை அடையாளம் கண்டு, அந்த இடத்திலேயே அதை நசுக்க வேண்டும்.

கேள்வி: "நீங்களோ என்னை நாம ஜபம் செய், போதும். இருக்கிறபடியே இரு. வேறு ஒன்றும் தேவை இல்லை" என்கின்றீர்கள். ஆனால் எனக்கோ வீட்டை துறந்து துறவறம் மேற்கொள்ளலாம் என்று எண்ணம் அடிக்கடி வருகின்றது!

பதில்: மனது ஒருவனை பலவிதத்தில் கவிழ்க்க பார்க்கும். அதில் ஒன்றுதான் இது. மனது நம்மால் எந்த விதத்திலும் முடியாத ஒரு விஷயத்தை, முடியும் என்று நம்மை கிள்ளி விட்டு, அதை

ஆரம்பிக்க செய்து விடும். ஆனால், அந்த வேகம் சிறிது நாட்களிலேயே அடங்கி விடும். அதனால் நாம் திசை மாறி போய் விடுவோம். அல்லது தடுமாறுவோம்.

ஏன் சில சமயங்களில், தவறான முடிவுகளால், பல தவறுகள் நடந்து விடுவது உண்டு. மனதின் அடுத்த ஜாலம் என்னவென்றால், உன்னால் எது முடியுமோ எது உனக்கு நன்மையானதோ எது எளிமையாக உள்ளதோ, அதன் மேல் அலட்சியத்தை ஏற்படுத்தி, அதை செய்ய விடாமல் செய்து விடும்.

---

* பிரார்த்தனையை செய்வது மட்டும்தான் நாம். பலனை தருவது பகவான்.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

---




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com



# பாகவத பழம்

## பாகம் 2 – அத் 1G

–ஸ்ரீஸ்வாமிஜி (34)

மஹரிஷிகளின் ஆசீர்வாதத்தை பெற்று விட்டு, வந்து கொண்டிருந்த பரீக்ஷித். ஒரு ஆச்சரியமான காட்சியைப் பார்த்தான். தர்மதேவதை ஒரு காலால் மிகவும், கஷ்டப்பட்டு நடந்து கொண்டிருந்தது. அருகில் பூமியோ, பசு ரூபத்தில் இருந்தது. அந்த பூமி (பசு) மங்களம் இழந்து, அழுதுகொண்டிருந்தது. அதைப் பார்த்த தர்மதேவதை, பலவிதமாக கேள்விகளை அக்கறையுடன் கேட்டுவிட்டு "தாயே! தேவர்களாலும் பூஜை செய்யப்படக்கூடிய நீ இன்று மனோவியாதியால் பீடிக்கப்பட்டு வருந்துவதன் காரணம் என்ன?'' என்று கேட்டது.

பூமிதேவியானவள் இதைக் கேட்டு, தன்னையும் ஒருவர் அன்புடன் வினவுகின்றாரே என்ற சந்தோஷத்துடன் பதில் உரைக்க ஆரம்பித்தாள்.

"எல்லாம் அறிந்த தர்மதேவதையே! நீயே ஒன்றும் தெரியாததுபோல் கேட்பதைப் பார்த்து வியப்படைகின்றேன். பகவான் வாசுதேவன் எல்லா உலகங்களுக்கும் சுகத்தை உண்டு பண்ணினான். அப்பொழுது நீயும் நான்கு கால்களோடு இருந்தாய்".

"உண்மை, பரிசுத்தம், கருணை, அடக்கம், அளவில்லாத கொடை, மகிழ்ச்சி, நேர்மை, மன உறுதி, வெளி வியாபாரங்களை அடக்குதல், தவம், சந்தோஷமாக கலைகளையும் இயற்கையையும் ரசித்துப் பொழுதுபோக்குதல், பொறுமை, சாந்தம், எப்பொழுதும் சாஸ்திரங்களை அலசி ஆய்தல், சரியான வழியில் செல்லக்கூடிய நுண் அறிவு, விரக்தி, அபரிமிதமான பொருள், தடங்கலில்லாத பராக்கிரமம், தேஜஸ், உடலில் சாமர்த்தியமும்,

அபரிமிதமான ஞாபகசக்தியும், யாரையும் எதற்கும் சார்ந்து இல்லாமல் சுதந்திரமாக செயல்படுபவனும், செய்யவேண்டிய காரியங்கள் மற்றும் எல்லாவற்றைப்பற்றின பூரண அறிவும், மனதைக் கொள்ளை கொள்ளும் அழகும், வீரமும், அதேநேரத்தில் ம்ருதுவாக நடப்பதும், கலந்து கொள்ளும் எல்லாவற்றிலும் வெற்றி கொள்ளுதலும், யாரிடம் எங்கு எப்பொழுது என்ன பேசவேண்டும் என்று அறிந்தவனும், அதே நேரத்தில் பயமில்லாமல் நியாயத்தைப் பேசுபவனும், வணங்க வேண்டியவர்களிடம் பணிவும் நல்ல காரியங்களில் சோம்பலில்லாமல் ஈடுபட்டுக் கொண்டிருப்பதும், ஞான இந்திரியங்கள், கர்ம இந்திரியங்கள் பத்திலும் சாமர்த்தியம் உள்ளவனாக இருப்பதும், தர்மமான போகத்தை தானும் அனுபவித்து பிறரையும் அனுபவிக்கச் செய்பவனும், எந்த நிலையிலும் கலங்காதிருப்பவனும், சஞ்சல புத்தி இல்லாமல் ஸ்திர புத்தி உடையவனாக இருப்பதும், விடா முயற்சியும், புகழும், அபிமானமும், தான் என்ற அஹங்காரம் இல்லாமையும், மேற்படி 39 குணங்களை மேன்மையடைய விரும்புபவன் இறைவனிடம் பிரார்த்திப்பான்."

"ஆனால், இத்தகைய குணங்கள் இயற்கையாகவும், இதைத் தவிர அநேக குணங்களும் அழிவில்லாமல் நிலையாக இருந்த வாசுதேவன், உலகத்தை விட்டுச் சென்றதையும், கலிபுருஷனால் நான் பீடிக்கப்பட்டதையும் நினைந்தே நான் வருந்து கின்றேன்'' என்றாள்.

"இந்தக் கலி, ஆரம்பிக்கும்பொழுதே இப்படி இருக்கின்றதே! இது போகப் போக இந்தக் கலியில் பூமியான நானும், தர்மத்தின் தலைவனான நீயும், பித்ருக்களும், ரிஷிகளும் சாதுக்களும், அதுபோலவே உலகத்திலுள்ள எல்லா மக்களும் எப்படி இருப்பார்களோ!'' என்று நினைத்தும் வருந்துகின்றேன்.

"பிரும்மா, மஹாலக்ஷ்மியின் கடைக்கண் பார்வைக்காக கடும் தவமியற்றினார். ஆனால் அந்த மஹாலக்ஷ்மி, தான் தோன்றிய தாமரைக்குளத்தை விட்டு, எப்பொழுதும் நகர்ந்துகொண்டே இருக்கும் தன்னுடைய இயற்கையையும்

மாற்றிக்கொண்டு, பகவான் ஸ்ரீவாஸுதேவனுடைய சரணத்தில் நிரந்தமாக வாசம் செய்தாள்.

"அந்த வாஸுதேவனுடைய சரணத்தில் தாமரை, அங்குசம், கொடி, வஜ்ரம், போன்ற ரேகைகளால் பூமியான நான் கிருஷ்ணாவதாரத்தில் புனிதமடைந்தேன். மூன்று உலகங்களும் என்னைப் பார்த்து அதிசயித்தன. ஒருக்கால் எனக்கு கர்வம் வந்துவிட்டதோ என்னவோ, என்னை அநாதையாக விட்டுவிட்டு வாஸுதேவன் சென்றுவிட்டான்".

"பூபாரத்தைக் குறைப்பதற்கும், தர்மமான உன்னைக் காப்பாற்றுவதற்கும், பகவான் வாஸுதேவன் அவதரித்தான் அல்லவா!" அவனுடைய அழகான கண்கள், வார்த்தைகள், புன்சிரிப்பு இவைகள் பெண்களைக் கொள்ளை கொள்ளக்கூடியது. லக்ஷ்மிதேவிக்கே உரிய பாதத்தை என்மீது வைத்தான். அதனால் என்னுடைய மேனியில் சிலிர்ப்பும், ஆனந்த பாஷ்பமும் ஏற்பட்டது. அவனுடைய சங்கமம் ஒரு க்ஷணம், கிடைத்த பெண் கூட அவனுடைய பிரிவைத் தாங்க மாட்டாள். அப்படி இருக்கும் போது, அவனுடைய பிரிவை, பெண்ணான நான் எப்படித் தாங்குவேன்?

இப்படியாக பூமியும் தர்ம தேவதையும் பேசிக்கொண்டிருக்கும்போது, பரீக்ஷித்து கிழக்கு நோக்கி உள்ள குருக்ஷேத்திரத்தை அடைந்தான்.

(கனியும்)

---

கடந்த காலம் கரைந்தது காற்றில்
எதிர் காலமோ எதிரி போல் பயமுறுத்துது என்னை
நிகழ்காலத்தில் நிலையாமல் நிற்குது மனது
மூன்றும் ஒன்றானால் அதுதான் ஆயுளின் கணக்காமே!

—குள்ளஹரி


# ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகளின் கருணை

-ப்ரும்மஸ்ரீ தத்வமஸி கனபாடிகள்

ஸ்ரீலட்சுமண அய்யர் என்பவர் கும்பகோணத்தில் (SUB JUDGE) சப்-ஜட்ஜ் ஆக பணிபுரிந்து வந்தார். அப்பொழுது காஞ்சி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், வேப்பத்தூரில் முகாமிட்டு இருந்தார்கள். லட்சுமண அய்யர், ஸ்ரீபெரியவாளை தரிசனம் செய்து விட்டு, பூஜையும் பார்த்து விட்டு, தீர்த்த பிரசாதம் வாங்கி வரலாம் என்று வேப்பத்தூர் சென்றார்.

பகல் ஒரு மணி ஆகியும் கூட, அன்று ஸ்ரீபெரியவாள் சந்திரமௌலீஸ்வரர் பூஜைக்கு வரவில்லை. ஸ்ரீபெரியவாள் ஒரு பாழ் மண்டபத்தில், முகவாய்க்கட்டையில் கை வைத்து கொண்டு சோர்வாக அமர்ந்திருந்தார். மேனேஜர் மற்றும் எல்லா பக்தர்களும் சென்று, ஸ்ரீபெரியவாளை வந்தனம் செய்து, பூஜைக்கு வர வேண்டுமென பிரார்த்தித்தார்கள்.

உடனே ஸ்ரீபெரியவாள் மேனேஜரை பார்த்து, "1939ஆம் வருடம் நாம் கல்கத்தாவில் முகாம் இட்டிருந்தோம். ஞாபகம் இருக்கின்றதா? அப்பொழுது தினமும் ஒருவர் பூஜைக்கு 2,3 கூடைகளில் வில்வம் கொண்டு வந்து கொடுப்பாரே! உனக்கு ஞாபகம் இருக்கின்றதா? அப்படி அவர் வரும்பொழுது ஒரு நாள் நான் அவருக்கு பிரசாதம் கொடுத்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை. அவருடைய விலாசத்தை குறித்து கொள்ள சொன்னேன். ஞாபகம் இருக்கின்றதா?"



"அன்று அந்த பக்தனுக்கு வெறும் விபூதி, குங்குமம், அக்ஷதை பிரசாதம் கொடுத்து அனுப்பி விட்டேன். அந்த பக்தனுக்கு இப்பொழுது கடைசிகாலம் வந்து விட்டது. தவிக்கின்றான். அவனுடைய பையன், அப்பாவிற்கு ஈமக்கிரியைகள் செய்ய பணம் இல்லாமல் தவிக்கின்றான். உடனடியாக ரூ350 தந்தி மணி ஆர்டர் அனுப்பி வை. நான் ஸ்நானம் செய்து விட்டு, பூஜைக்கு வருகின்றேன்" என்றார்கள்.

ஸ்ரீபெரியவாள் பூஜை முடித்து விட்டு வருவதற்குள், "தக்க சமயத்தில் பணம் வந்தது. மிகவும் உதவியாக இருந்தது" என்று பதில் தந்தியும், அவர்களுடைய பையனிடமிருந்து வந்து விட்டது.

எங்கோ ஒரு யாத்திரையில் ஒரு பூஜைக்கு வில்வம் கொண்டு வந்ததை ஞாபகம் வைத்து கொண்டு, அதோடு மட்டுமல்லாமல், அவர் காலமானதை ஞான திருஷ்டியால் தெரிந்து கொண்டு, தக்க சமயத்தில் உதவியது என்பது எவ்வளவு பெரிய விஷயம்! அதுதான் ஸ்ரீமஹாபெரியவாளின் காரணமில்லாத கருணை.

இந்த ஜனவரி மாதம் 8ஆம் தேதி; ஸ்ரீமஹாபெரியவாளின் ஆராதனை. அன்று நாம் அவரை ஸ்மரித்து, வந்தனம் செய்து சர்வ மங்களங்களையும் அடைவோமாக.

## *ஜனவரி 8, 2013 – ஏகாதசி – பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சன்னதி*



*ஜனவரி மாதம் 8ஆம் தேதி – ஏகாதசி அன்று பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சன்னதியில் ஸ்ரீஸ்வாமிஜி ஸ்ரீகாஞ்சி மஹாஸ்வாமிகள் உபன்யாசங்கள் CDயை வெளியிடுவார்கள்.*

# SRI SANDEEPANI GURUKULA TRUST
மற்றும்
# GLOBAL ORGANISATION FOR DIVINITY INDIA

**உங்களை அழைக்கிறது.**

ஜனவரி 12ம் தேதி முதல் 20ம் தேதி வரை
இடம் - **நாரத கான சபா, மைலாப்பூர், சென்னை**
நேரம் - தினமும் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை

ஜனவரி 13ம் தேதி 2013 மாலை 6.30 மணி முதல்

**காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால்**
**"சாஸ்த்ர ரத்னாகர"** விருதுபெற்ற "மஹாமஹோபாத்யாய" "வேதபாஷ்யரத்ன"
**முல்லைவாசல் ப்ரும்மஸ்ரீ டாக்டர் R. க்ருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகளை**
கௌரவப்படுத்துதல்

**சிறப்புரை**

1. "சாஸ்த்ர ரத்னாகர" ப்ருஹ்மஸ்ரீ மணி த்ராவிட் சாஸ்த்ரிகள்
2. "மஹாமஹோபாத்யாய" "சாஸ்த்ர ரத்னாகர" "வேதபாஷ்யரத்ன" முல்லைவாசல் டாக்டர் R.க்ருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
3. சாஸ்த்ரிகளின் வித்யார்த்திகள் உரை
4. மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் சாஸ்த்ரிகளை கௌரவப்படுத்துதல்

பம்மல் ப்ரும்மஸ்ரீ ஏகாம்பர சாஸ்த்ரிகள் எழுதிய
**"மஹாபெரியவாளும் ஏகாம்பரமாகிய நானும்"**

நூல் வெளியீட்டு விழா

*முதல் ப்ரதியை வெளியிடுபவர்:*

**மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்**

*பெற்றுக்கொள்பவர்*

**நீதியரசர் திரு. T. S. அருணாச்சலம் அவர்கள், திருவண்ணாமலை**
யோகிராம்சுரத்குமார் அவர்களின் SPIRITUAL SUCCESSOR

**சிறப்புரை**

1. நீதியரசர் திரு. T.S. அருணாச்சலம் அவர்கள்
2. பம்மல் ப்ரும்மஸ்ரீ ஏகாம்பர சாஸ்த்ரிகள்
3. மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்

திருவையாறு பஹு்வாஜபேயயாஜீ மஹாக்னிசித் பஹு்யஜ்வா சோமயாஜீ நித்யாக்னிஹோத்ரி ஸலக்ஷண கனபாடி, வேதகாவ்யச்ரௌதஅத்யாபகர் ப்ரும்மஸ்ரீ A.சுந்தரேச சர்மாவிற்கு **"யக்ஞ தத்வ ரக்ஷாமணி"** என்ற ப்ருது வழங்கி கௌரவப்படுத்துதல்.

சிறப்புரை

1. சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ கண்ணாமணி தீக்ஷிதர்
2. மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
   ப்ரும்மஸ்ரீ A.சுந்தரேச சர்மாவிற்கு **"யக்ஞ தத்வ ரக்ஷாமணி"** என்ற ப்ருதுவை வழங்கி கௌரவித்தல்
3. ப்ரும்மஸ்ரீ A. சுந்தரேச சர்மா அவர்கள்

*ஜனவரி 12 ம் தேதி 2013 மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை*
*மதுரகீதம் – ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின் கீர்த்தனைகள்*
*பாடுபவர்கள் – ஸ்ரீ ப்ரதீப் ஜானகிராமன் மற்றும் சத்சங்க அன்பர்கள்*

*ஜனவரி 14 முதல் 20 வரை மாலை 6.30 முதல் 8.30 மணி வரை*
*பாகவதஸ்ரீ ஈரோடு பாலாஜி பாகவதர் அவர்களால்*
*த்யாகராஜ ராமாயணம் – சங்கீத உபன்யாஸம் நடைபெறும்*

*எல்லோரும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு கோபாலனுடைய க்ருபைக்கும் குரு க்ருபைக்கும் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.*

## சனாதனப் புதிர் : பகுதி – 47 –ஆத்ரேயன்

(விடைகள் அடுத்த இதழில்)

1. சாத்யகியின் சங்கின் பெயர் என்ன?
2. நளகூபரன் - இவர் யார்?
3. மதிரா - இவர் யாருடைய மனைவி?
4. இந்திரனின் ஸாரதியான மாதலியின் பெண் பெயர் என்ன?
5. துஷ்யந்தனின் புதல்வனான பரதனுக்கும் அவரது மனைவி சுனந்தாவிற்கும் பிறந்த பிள்ளை யார்?
6. யக்ஷமா என்றால் என்ன?
7. ப்ரஹ்மாவின் நீதி சாஸ்திரத்தின் பெயர் என்ன?
8. ரேவதி - இவர் யார்?
9. யமுனாத்வீபம் - இதன் விசேஷம் என்ன?
10 பாஞ்சஜன்யம் - இது எதை குறிக்கிறது?
11. பிங்களன் - இது / இவர் யார்?

# விருத்திம்
# கர்நாடகே கதா

(12)

–ராமானுஜம்ஜி

உடுப்பி கிருஷ்ணனிடம் விடைபெற்றுக்கொண்டு, தமிழகம் திரும்புவதற்கான தருணமும் வந்தது. பெங்களூர் வழியாக சேலம் சென்று, பின், சேலத்திலிருந்து ஜனவரி 1, கோயம்புத்தூர் கூட்டு பிரார்த்தனையில் கலந்து கொள்வதென்று ஏற்பாடு. சேலம் திரு.வெங்கடராமன் இல்லத்தில் இயங்கி வரும் நாமத்வாருக்கு, எல்லோரும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் போய் சேர்ந்தோம். இரவு ஆகி விட்டது.

மறுநாள் காலையிலேயே, நாமத்வாருக்கு சுமார் 30அன்பர்கள் வந்துவிட்டனர். மார்கழி ஆனபடியால் எல்லோரும் திருப்பாவை சொன்னோம். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், மஹாமந்திரத்தை கீர்த்தனம் செய்வதனால் ஏற்படும் உன்னத பலன்களை பற்றியும், ஸ்ரீகிருஷ்ணன் அதனால் எப்படி சந்தோஷம் அடைகிறான் என்பது பற்றியும், மிக எளிமையாகவும் தமக்கே உரிய விதத்தில் ஆழமாக பதியும்படியும் பேசினார்கள்.



அதன் பின்னர் ஜனவரி 1, 2012 அன்று 5000அன்பர்கள் மத்தியில், கோயம்புத்தூரில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை ஸ்ரீஸ்வாமிஜி நிகழ்த்தியதும், அதன் நேர்முக ஒளிபரப்பை இணைய தளத்தில் சுமார் ஒரு லக்ஷம் அன்பர்கள் கண்டுகளித்தனர் என்பதும், நமக்கு எல்லோருக்கும் நன்றாக தெரிந்ததுதானே!

நாங்கள் எல்லோரும் குருநாதரின் நினைவுகளுடன் மிக மகிழ்ச்சியுடன் சென்னைக்கு திரும்பினோம்.

ராதே ராதே!

இன்று முதல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று, சத்தியம் செய்ய விரும்புகின்றேன். ஆனால் நான் சத்ய சங்கல்பனும் இல்லை, சத்யம் செய்தவுடன், அது தானே நிறைவேறுவதற்கு! சத்யம் செய்தால் அதை கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும், நிலையான புத்தி கிடையாது. ஆனால் நீ சத்ய சங்கல்பன்தானே! நான் ஒழுங்காக இருக்க வேண்டும் என்று, நீ சத்ய சங்கல்பம் செய்து கொள்ள கூடாதா?

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி


வீட்டு மனைகள்
விற்பனைக்கு

(PLOTS FOR SALE AT)

மேலும் சில மனைகளே உள்ளன.

ஸ்ரீப்ரேமிக வரதன் நகர், மாஹாரண்யம்

சிறப்பு அம்சங்கள்

* மலைகளும் ஏரிகளும் அமைந்த இயற்கை வளம் பெற்ற சூழல்
* LAYOUT AREAவில் முழுமையான COMMON COMPOUND WALL மற்றும் விசாலமான தார் சாலைகள்
* உடனடியாக வீடு கட்டி குடியேற வசதியான இடம்

(For Details contact)
'VIJAY ASSOCIATES ' PH:9940043234

A-1 VIJAY VATICA, # 18/33, SARAVANA STREET, T-NAGAR, CHENNAI 600 017. PH: 9940043234

ADVT

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

ADVT

## Our products

Globe Tipper




Unit Converter




Smart Alarm Pro




DRACO, The Dragon




## Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com

# Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**
**Consultant in Endocrinology, Diabetes & Metabolism**
**Regn. No 62256**

# ENDOCRINE & SPECIALITY CLINIC

**New No. 228, old No. 169, R.K.Mutt Road,**
**Mandaveli, Chennai - 600 028**
**(Next to Ravi Pharmacy)**

ADVT **Ph - 044 - 24950090, Mob - 9840488777**

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

## சனாதனப்புதிர் பகுதி 46 - விடைகள்- ஆத்ரேயன்

1. பீமசேனனால் : சகோதரன் பெயர் பானுதத்தன்

2. இவர் க்ஷத்திரியப் பெண். யுத்தபூமியில் இருந்து ஓடி வந்த தன் மகனை கடுமையாக விமர்சித்து அவனுக்கு யுத்தத்தில் எதிரிகளை வெல்வதற்காக யுக்திகள், உபாயங்கள் கூறுகிறாள் (உத்யோக பர்வா)

3. சம்பல் என்ற கிராமத்தில், ஒரு ப்ராஹ்மணனுக்குப் பிறக்கப் போகும் குழந்தை. இவரை விஷ்ணு யசா அல்லது கல்கி என்று கூறுவார்கள் (வனபர்வா)

4. ஹைமவதி

5. ராஜா சுஹோத்ரரின் புதல்வர் ஹஸ்தி. இந்த நகரத்தை ஹஸ்தி நிர்மாணம் செய்ததால் ஹஸ்தினாபுரம் என்ற பெயர் ஏற்பட்டது. அபிமன்யுவின் புத்ரனான பரீக்ஷித், இந்த நகருக்கு ராஜாவாக்கப்பட்டான்.

6. நைமிஷாரண்யத்திற்கு கிழக்கு திசையில் உள்ளது. இதற்கு அருகில் உள்ளது உபநந்தா.

7. உத்கோசகம் என்ற தீர்த்தம். தேவல் ரிஷியின் தம்பி. பாண்டவர்களின் புரோகிதர். வனவாசத்தின் பொழுது பாண்டவர்களுடன் வனத்திற்குச் சென்றவர்.

8. இவள் திரௌபதியின் வேலைக்காரி. ஜயத்ரதன் திரௌபதியை கவர்ந்து சென்ற விஷயத்தை பாண்டவர்களுக்கு தெரியப்படுத்தியவர் (வனபர்வா)

9. சமம், காமம், ஈர்ஷை – விதுரராகப் பிறந்தார்.

10. யுதிஷ்டிரர் விராட நகரத்திற்குள் பிரவேசம் செய்யும் பொழுது; மேலும் அர்ஜுனன் ஸ்ரீக்ருஷ்ணர் சொல்படி குருக்ஷேத்திர யுத்தம் ஆரம்பிக்கும் முன்; இரு முறையும் துர்க்கை ப்ரஸன்னமாகி வரம் கொடுத்தாள்.

---

## Inner transformation workshops in USA

Inner transformation and Youth Leadership workshopகளை ராமானுஜம்ஜி Joy of Sharing Trust சார்பாக டெக்சஸ், டல்லஸ், ஹூஸ்டன், சிகாகோ போன்ற நகரங்களில் நிகழ்த்தினார். ராமானுஜம்ஜியின் பல வருட ஆழ்ந்த அனுபவமானது பலருக்கும் பயன்பட்டது இவற்றில் நன்றாக தெரிந்தது.

* கம்சன், தேவகியையும் வசுதேவரையும் தேரில் அமர்த்தி, ஊர்வலம் அழைத்து செல்லும்போது, தெய்வம் அசரீரியாக, இவர்களுக்கு பிறக்கப்போகும் எட்டாவது குழந்தை உன்னை கொல்லும் என்று கூறியது. இதை அறிந்தும் கம்சன் வசுதேவரையும் தேவகியையும் பிரித்து வைக்கவில்லை! அப்படி செய்திருந்தால் குழந்தையே பிறந்திருக்காது அல்லவா? ஆனால் கம்சன் அப்படி செய்யவில்லை. தெய்வம் நடக்கப்போவதை ஏன் முன்பே கூறவேண்டும்? நாம் எதையும் முன்பே அறிந்தாலும், தெய்வ சங்கல்பம் எதுவோ அதுதான் நடக்கும் என்பதை உணர்த்தத்தான் அப்படி செய்தது!

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## *ஆறாம் ஆண்டு தெய்வத்தமிழ் இசை விழா*

ஆறாம் ஆண்டு தெய்வத்தமிழ் இசை விழா, சென்னை அசோக் நகர் மஹோதயா ஹாலில், சைதன்ய மஹாபிரபு நாம பிக்ஷா கேந்திரா சார்பாக டிசம்பர் 21 முதல் 27 வரை நடைபெற்றது. விழாவை நீதியரசர் திரு.**T.S.**அருணாசலம் அவர்கள், குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இசையில் ஆரம்பித்து, இயலிசையா நாடகமா என்ற பட்டிமன்றம், திருநாவுக்கரசர் பக்தி நாடகம், வள்ளி கல்யாண நாட்டிய நாடகம், ஊத்துக்காடு வெங்கடகவி அவர்களின் கீர்த்தனங்கள், விநாயகர் அகவல், அபிராமி அந்தாதி மற்றும் திருவாசக இன்னிசை என மிக அழகாக நடைபெற்றது. பூர்த்தி நாளன்று ஸ்ரீஸ்வாமிஜியின் தமிழ் கீர்த்தனங்கள் பாடப்பட்டது. திரளான அன்பர்கள் வந்திருந்து தங்கள் ஏகோபித்த ஆதரவை காண்பித்தனர்.

# ஆலயம் தொழுவது
# சாலவும் நன்று -9



திரு.எஸ்.ராஜப்பன்

11.01.2012 புதன்கிழமை காலை புரசைவாக்கம் வெள்ளாள தெருவில் அமைந்துள்ள, ஸ்ரீ ஸ்ரீநிவாசப் பெருமாளை சேவித்துவிட்டு வருமாறு உத்தரவாகியது. நாங்கள் இருவரும் காலை புரசைவாக்கத்திற்குச் சென்றோம். புரசைவாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள மாதர்ஷாவிற்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள, வெள்ளாள தெருவில் இக்கோயில் உள்ளது. இங்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு ஓர் பஜனை மடம் அமைக்கப்பட்டது. இவ்விடத்தின் உரிமையாளரான ஸ்ரீஜகன்னாத செட்டியாரின் கனவில், திருப்பதி ஸ்ரீதிருவேங்கடமுடையான் தோன்றி, தமக்கு இந்த இடத்தில் திருக்கோயில் அமைத்திட உத்தரவிட்டாராம். எனவே இப்பெரியவர் 1850ஆம் ஆண்டு இத்திருக்கோயிலை நிர்மாணித்தார். பஜனை மடத்தில் வைக்கப்பட்டிருந்த சிறிய பெருமாள் கற்சிலை, தற்போதும் பெருமாள் சன்னிதியில் உள்ளது. இத்திருக்கோயில் கர்ப்பக்கிரகத்தில் மூலவர் ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாள் ஏழடி உயரத்தில் மிக அழகுடன் திருக்காட்சியளிக்கின்றார். மேலும் ஸ்ரீஜகன்னாத செட்டியார் கனவிலிருந்து விழித்தெழுந்தபோது, அருகில் ஓர் மணி இருந்ததைக்காண, திருவேங்கடமுடையானின் மணியின் அம்ஸமாகக் கருதப்படும் ஸ்வாமி தேசிகனின் திருவுருவமும் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு அலர்மேல் மங்கைத் தாயார் சன்னிதி, மற்றும் ஸ்ரீஆண்டாள், ஸ்ரீசக்கரத்தாழ்வார், ஸ்ரீபக்த ஆஞ்சனேயர், ஸ்ரீயோக நரஸிம்ஹர், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர் எல்லோரும் சேவை சாதிக்கிறார்கள். இத்திருக்கோயிலில் ப்ரம்மோத்ஸவம், ஜனவரி மாதம் 10 நாட்கள் நடைபெறுகிறது. வருடந்தோறும் ஏப்ரல் மாதம் லக்ஷார்ச்சனை செய்யப்படுகின்றது. நவராத்திரி உத்ஸவம்,

ஸ்வாமி தேசிகனின் அவதார உத்ஸவம், புரட்டாசி மாதம் சனிக்கிழமை கருடசேவை, தை மாதம் சிரவண தீர்த்தவாரி போன்ற உத்ஸவங்கள் இத்திருக்கோயிலில் சிறப்பாக நடைபெறுகின்றன. இத்திருக்கோயில் ஸம்ப்ரோக்ஷணம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. கடைசியாக 2006ஆம் ஆண்டு சம்ரோக்ஷணம் நடந்தேறியுள்ளது. இத்திருக்கோயில் திருவிடந்தை ஸ்ரீநித்ய கல்யாணப் பெருமாளின் அபிமான ஸ்தலம் என்றும், ஸ்ரீஸ்ரீநிவாசப் பெருமாளின் சடாரி ஸ்ரீநித்ய கல்யாணப் பெருமாள் கோயிலிலிருந்து கொடுக்கப்பட்டது என்றும் அறியப்படுகிறது.

இத்திருக்கோயிலில் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக குழந்தைகளுக்கான திருப்பாவை போட்டி, மார்கழி மாதம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாதந்தோறும் பகுளாபஞ்சமி தினத்தன்று, இக்கோயிலில் கர்நாடக இசைக் கச்சேரி நடத்தப்பட்டு வருகின்றது.

மைலாப்பூர் அகடெமி ஆண்டுதோறும் வழங்கும் சிறந்த ஆலய நிர்வாகத்திற்கான சுழற்கேடயத்தினை, இத்திருக்கோயில் மும்முறை பெற்றுள்ளதென்பது மிகவும் போற்றுதற்குரிய செய்தியாகும். இத்திருக்கோயிலுக்கு அஹோபிலமடம் ஜீயர், ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள், மைசூர் பரகாலமடம் ஜீயர் ஸ் வாமிகள், காஞ்சி மஹாஸ்வாமிகள் போன்ற மஹான்கள் விஜயம் செய்து, பெருமாளை சேவித்து, மங்களாசாசனம் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் காஞ்சி மஹாஸ்வாமிகள், திருப்பதி ஸ்ரீதிருவேங்கடமுடையானுக்குச் செய்துகொள்ளும் பிரார்த்தனைகளை இத்திருக்கோயிலில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் அருள்மொழி பகர்ந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை இங்கு நமது சத்சங்கத்தைச் சேர்ந்த அன்பர்கள் தொடர்ந்து வாரம் ஒருமுறை மஹாமந்திரகீர்த்தனை செய்து வந்தார்கள் என்னும் தகவலை இத்திருக்கோயில் அர்ச்சகர் எங்களிடம் தெரிவித்தார். இங்கு பெருமாளை சேவித்து, ப்ரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு மனநிறைவுடன் நாங்கள் திரும்பிவந்தோம்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## சிங்கத்துடன் விளையாட்டு

ஒரு சர்க்கஸ் கம்பெனி இருந்தது. அதில் வித விதமான வித்தைகளை செய்து காண்பிப்பார்கள். கயிற்றின் மீது நடப்பது, தாண்டுவது, குதிப்பது, தலை கீழே தொங்குவது, தொங்கியபடி ஆடுவது, பலர் சேர்ந்தாற்போல் இரு சக்கர வண்டியில் செல்வது, வட்டமான சறுக்கல் பாதையில் வண்டி ஓட்டுவது என பல செய்வர். அதில் மனிதர்களோ விலங்குகளோ பங்கேற்பர். மான் முதல் சிங்கம் வரை, எல்லாவிதமான மிருகங்களும் அந்த சர்க்கஸ் கம்பெனியில் இருக்கும். விலங்குகளே பல வேடிக்கை விநோதங்களை செய்து காண்பிக்கும். அந்த கம்பெனியில் நல்ல பராக்ரமமுள்ள ஐந்து ஆண் சிங்கங்கள் இருந்தன. பலருக்கு இதில் பிராணிகளுக்கு, உணவு கொடுப்பது ஒவ்வொன்றையும் பராமரிப்பது என்று வேலை இருந்தது. இந்த கம்பெனி அழகாக நிகழ்ச்சிகளை போட்டு காண்பித்ததால், அதற்கு தேசமெங்கும் நல்ல வரவேற்பு இருந்தது.

அந்த சர்க்கஸில் மிக மிக முக்கியமாக ஒருவர் வேலை பார்த்து வந்தார். அவர் ஒரு ரிங் மாஸ்டர். அந்த சர்க்கஸ் நிகழ்ச்சியிலேயே, அவரது நிகழ்ச்சியைத்தான் பார்வையாளர்கள் அதிகம் ரசித்தனர். காரணம், அவருக்கு சிங்கங்களை வைத்து சர்க்கஸ் செய்து காட்ட வேண்டிய பொறுப்பு. அந்த வேலையை அவர் திறம்பட செய்து வந்தார். அதனால், அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது. அவர், இப்படி மிக கடினமான வேலையை செய்து வந்ததாலோ என்னவோ அவருக்கு அடிக்கடி வாழ்க்கையில் ஒரு சலிப்பு தட்டும். "என்ன இது எப்பொழுது பார்த்தாலும், இந்த காட்டு சிங்கங்களை வைத்து வித்தை காட்டுவதே தொழிலாக போய் விட்டது. இதில் சரியான ஓய்வே இல்லை. சலிப்பாக இருக்கிறது. இதை விட்டு சென்று விடலாமா என்று தோன்றுகிறது" என்று அவர் தன்னுடைய நண்பர் ஒருவரிடம்

சொல்லி கொண்டே இருப்பார். அந்த நண்பரும் அதே சர்க்கஸ் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். அவர் கொஞ்சம் முதியவர். வாழ்வில் அனுபவப்பட்டவர்.

ரிங் மாஸ்டர் வாழ்க்கையை பற்றி சலித்து கொண்டு பேசும்பொழுதெல்லாம் அந்த நண்பர் "அப்படி சொல்லாதே. உன் வேலைக்கு என்ன குறை? வெகு காலமாக செய்து, உனக்கு சிங்கங்களை அடக்குவது என்பது பழக்கமாகி விட்டது. ஏன் சலித்து கொள்கிறாய்? வேலை என்பது எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்காது. உனது வேலையில் கவனம் மிக முக்கியம். உன் வேலைக்கு நடுவில், நீ இப்படி எல்லாம் நினைத்தால் அது ஆபத்தில் கொண்டு விடும். மனச்சோர்வு அடைவதுதான் இருப்பதிலேயே மிக பெரிய வியாதி. மனதை உற்சாகமாக வைக்க பழகி கொள். கொஞ்ச நாளில் எல்லாம் சரியாகி விடும்" என்று ஊக்குவித்து கொண்டே இருப்பார்.

அவருடன் பேசுகையிலேயே, ரிங் மாஸ்டருக்கு கொஞ்சம் மனது இலேசாகி விடும். சரி என்று பேசாமல் இருந்து விடுவார். ஆனாலும், அவ்வப்பொழுது அவருக்கு எதிர்மறையான எண்ணங்கள் தலை தூக்கி கொண்டே இருக்கும். அவருக்கு அப்பொழுது எல்லாம் வெறுப்பாக இருக்கும். இப்படியே காலம் போய் கொண்டு இருந்தது. விடுமுறை நாட்களிலும் ஞாயிற்று கிழமைகளிலும் கூட்டம் சர்க்கசிற்கு அதிகமாக வரும். அதிக நிகழ்ச்சிகளும் இருக்கும். அப்படி ஒரு ஞாயிற்று கிழமை மாலை, ரிங் மாஸ்டர் சிங்கங்களை வைத்து, அடக்கி, வித்தை காண்பித்து பார்வையாளர்களை மகிழ்வித்து கொண்டிருந்தார். அப்பொழுது சட்டென அவர் உள்ளத்தில் மறுபடி "இதென்னடா வாழ்க்கை. விட்டு விடலாம். இந்த பிழைப்பு நமக்கு வேண்டாம்" என்று நினைப்பு தோன்றியது. இப்படி அவர் நினைக்க நினைக்கவே, அவர் கவனம் சிதற ஆரம்பித்தது. கவனம் சிதறியதால், அவர் சிங்கங்களுக்கு தரும் ஏவல்களை சரியாக இடவில்லை.

இதை அவரது சக ஊழியரான வயதான நண்பரும் கவனித்தார். தம் தொண்டையை செருமி, அவர் ரிங் மாஸ்டரின் கவனத்தை கொஞ்சம் ஈர்த்து கண்ணாலேயே "வேலையை

ஒழுங்காக செய்" என்று ஜாடை காண்பித்தார். அதை பார்த்த ரிங் மாஸ்டரும் சிங்கங்கள் பக்கம் கவனத்தை செலுத்தினார்.

அப்பொழுதுதான் அவருக்கு சுரேலென உரைத்தது. அது என்ன என்றால் "தான் ஒழுங்காக சிங்கங்களை கட்டுப்படுத்தவில்லை என்றால், இந்த சிங்கங்கள் பாய்ந்து ஓடக்கூடும். அது பார்வையாளர்களுக்கு ஆபத்து. என்னையே கூட இவை அடித்து விடும். எனக்கே உலை வைக்கும்படியாக, நான் மடத்தனமாக கவனக்குறைவாக இருக்கிறேனே" என்று தன்னையே நொந்து கொண்டார். அப்பொழுது "வேலையில் கவனமுடனும் உற்சாகமுடனும் இருப்பது அவசியம்" என்று நண்பர் சொன்ன உபதேசமும் ஞாபகத்திற்கு வந்தது. மேற்கொண்டு ஒழுங்காக கவனமுடன் சிங்கங்களை அடக்கி, அவைகளை கூண்டில் அடைத்தார். அப்பொழுதுதான் அவர் மனம் நிம்மதியானது.

பாலகர்களே! அது போல்தான் நமக்கும் வாழ்க்கையில் தொழிலிலோ, வேறு ஏதாவது விஷயத்திலோ சிக்கல், தடங்கல், பிரச்சனை என்று ஏதாவது வந்து இருக்கலாம். அதற்கு ஒரு தீர்வு காண முயற்சி ஒன்றை செய்து வந்து இருப்போம். அப்பொழுது எல்லாம், மனம் தனது இயல்பினால், எதிர்மறை எண்ணங்களை தோற்றுவிக்கலாம். எல்லாவற்றையும் விட்டு விடலாம் என்று மனம் சொல்லும். உற்சாகம் இழந்து நிற்கலாம். சலிப்பு தட்டலாம். ஆனால் நாம் மனதை சலிக்கவோ, சோர்வு அடையவோ இடம் கொடுக்க கூடாது. தகுந்த துணையுடன், உற்சாகமாக செயல்பட வேண்டும். அந்த சமயத்தில் சிக்கலை விட்டு விட்டு, ஓடக்கூடாது. தீர்வுக்கான முயற்சியை நிறுத்தி விடக்கூடாது. துவண்டு போகக்கூடாது. சிக்கலிற்கு தைரியமாக ஒரு தீர்வு காண முயல வேண்டும். சிக்கலுக்கு தீர்வை கண்டுபிடித்து விட்டால், லாபம். அதுவரை பொறுமையும் விடாமுயற்சியும் தேவை.

மாறாக செயலையே விட்டு விட்டால், சிங்கத்தை அடக்க மறந்த ரிங் மாஸ்டரை சிங்கமே அடித்து விடுவது போன்ற நிலைமை ஆகி விடும். வந்த சிக்கலிற்கு தீர்வு காண முயலாத செயலின்மை என்பது, நம்மை, அந்த சிக்கலே மேலும் துன்பத்தில் கொண்டு தள்ள உதவி விடும்.

**டிசம்பர் 16** முதல் மதுரபுரி ஆஸ்ரத்தில் ப்ரேமிகவரதனுக்கு **தனுர்மாத பூஜை** நடைபெற்று வருகிறது. **டிசம்பர் 18** முதல் பத்து நாட்களுக்கு அத்யயன உத்ஸவமும் அரையர் சேவையும் நடைபெற்றது. பிரபந்த கோஷ்டியுடன் பெருமாள் புறப்பாடு கண்டருளினார்.

**டிசம்பர் 21, 22** தேதிகளில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், **சிவகாசி** நாமத்வார், **தூத்துக்குடி** நாமத்வார், **விருதுநகரில்** புதிதாக அமைய உள்ள நாமத்வார் ஆகிய நாம மையங்களுக்கு விஜயம் செய்து, சத்சங்கங்களை நிகழ்த்தினார்கள்.

**டிசம்பர் 24** மதுரபுரி ஆஸ்ரமத்தில் வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்பட்டது. காலையில் ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு ஸ்ரீஸ்வாமிஜி திருமஞ்சனம் செய்து தீர்த்த பிரசாதம் தந்தார்கள். ஏராளமான அன்பர்கள் பங்கு கொள்ள இரவு முழுவதும் அகண்டமாக மஹாமந்திர நாமகீர்த்தனம் நடைபெற்றது. வந்திருந்த அன்பர்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது.

**டிசம்பர் 9** கார்த்திகை கடை ஞாயிறன்று ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் உற்சவர், மலைப்பட்டு, மஹாரண்யம் கிராமங்களை சேர்ந்த ஏராளமான இளஞர்களுடன் வனப்பகுதிக்கு எழுந்தருளினார். விமரிசையாக வனபோஜன உத்ஸவமும் கிராமிய விளையாட்டுக்களும், மரங்கள் நடுவதும் நடைபெற்றது. அன்னதானத்திற்கு பின் பெருமாள் சன்னதி சேர்ந்தார். தனுர்மாதத்தில் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் திருக்கோவில் சுற்றி உள்ள கிராம குழந்தைகள் நகரசங்கீர்த்தனம் செய்து வருகின்றனர். சென்னை ஜனாபாய் டிரஸ்ட் சார்பாக, நாமகீர்த்தனம் செய்த 90சிறார்களுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் காலணிகள் தந்து அருளினார்கள். ஆண்டு தோறும் இச்சிறார்களுக்கு சைதன்யமஹாபிரபு நாம பிக்ஷா கேந்திரா மூலமாக புத்தாடைகள் பொங்கலை ஒட்டி வழங்கப்படுகின்றன.

**அமெரிக்க சத்சங்கங்கள் – நவம்பர் 21** அன்று **Guruvayurappan temple Farmers Branch, Texas** இல் குருவாயூரப்பன் மஹிமையையும் நாம ஸ்மரணத்தின் அவசியத்தையும் ராமானுஜம்ஜி எடுத்து பேசினார்.

**நவம்பர் 22 – 25** தேதிகளில் **Dallas DFW Temple** இல் மதுர உத்ஸவ நிகழ்ச்சியில் ஸ்ரீமத்பாகவத பாராயணமும், ஸ்ரீகிருஷ்ண லீலா சத்சங்கமும் நடைபெற்றது. ராமானுஜம்ஜி கிருஷ்ண ஜனனம், தாமோதர லீலை, கோவர்த்தன உத்தாரணம், ருக்மிணி கல்யாணம் குறித்து உபன்யாசங்கள் செய்தார். ஜூலா உத்ஸவம், அன்னகூடோத்ஸவம், திவ்யநாமம், ருக்மிணி கல்யாணம் நடைபெற்றது. ராமானுஜம்ஜி நவவித பக்தியையும் கிருஷ்ணன் செய்த நவரத்னமான லீலைகளையும் ஒப்பிட்டு அழகாக பேசினார். ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் அன்பர்களால் பாடப்பட்டன.

**நவம்பர் 29 – டிசம்பர் 1** தேதிகளில் **Dallas** காரிய சித்தி ஹனுமான் கோவிலில் **"Inner transformation through Bhagavata Dharma"** என்ற தலைப்பில் ராமானுஜம்ஜி உரை நிகழ்த்தினார்.

**டிசம்பர் 5** **Bay Area** கலிபோர்னியாவில் கோபகுடீர குழந்தைகள் நாடகம், பஜனை, கீர்த்தனைகளை அழகாக செய்தனர். ராமானுஜம்ஜி குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

**டிசம்பர் 6–8 – Sunnyvale city** கலிபோர்னியா சனாதன தர்ம கோவிலில் கிருஷ்ணார்ப்பணம் என்ற தலைப்பில் கிருஷ்ண லீலைகளை அழகாக எடுத்து பேசினார். மூன்று நாட்களும் ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்களை அன்பர்கள் அழகாக பாடினர். மேலும் பல அன்பர் இல்லங்களில் ராமானுஜம்ஜி பாகவத தர்மம் குறித்து ஹூஸ்டன், டல்லஸ் மற்றும் கலிபோர்னியாவில் பல சத்சங்கங்களை நிகழ்த்தினார். ராதாகல்யாண மஹோத்சவங்களையும் ராமானுஜம்ஜி நிகழ்த்தினார். சத்சங்கங்களில் ராமானுஜம்ஜி ஸ்ரீஸ்வாமிஜியுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், மதுரஸ்மிருதி என்ற தலைப்பில் அன்பர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

**டிசம்பர் 9 Redding** கலிபோர்னியா கோபகுடீர குழந்தைகள் சோகமேளா நாடகம் அரங்கேற்றினர். ராமானுஜம்ஜி அந்த குழந்தைகளுக்கு சான்றிதழ் வழங்கினார். **டிசம்பர் 10 "The Center for Spiritual Living"** கலிபோர்னியா மையத்தில், பாகவத தர்மம் குறித்து ராமானுஜம்ஜி உரையாற்றினார்.

**நவம்பர் - டிசம்பர் 2012 தென்மாவட்ட சத்சங்கங்கள்**- அம்பாசமுத்திரம், வீரவநல்லூர், பாப்பாக்குடி, ஆழ்வார்குறிச்சி, வி.கே.புரம், வள்ளியூர், ரவணசமுத்திரம், சேரன்மஹாதேவி உள்ளிட்ட பதினொரு இடங்களில் குருமஹிமை, பகவன்நாம மஹிமை தலைப்புகளில் டிசம்பர் 4 முதல் 12 வரை சத்சங்கமும் கூட்டு பிரார்த்தனையும் முரளிஜி நிகழ்த்தினார். இவற்றில் 600அன்பர்கள் கலந்து கொண்டு பயனுற்றனர். **அம்பாசமுத்திரம்** அருகே கடையத்தில் இரு பள்ளிகளில் டிசம்பர் 7, 11 தேதிகளில் சுமார் 800மாணாக்கர்கள் முன்பாகவும், மதுரையில் நவம்பர் 26 முதல் 30தேதிகளில் சுமார் 6000மாணாக்கர்கள் முன்பாகவும், நான்கு பள்ளிகளில் முரளிஜி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையை நிகழ்த்தினார். முன்னதாக **மதுரை நாமத்வார்** மையத்தில், **ஆழ்வார்களும் நாம வைபவமும்** என்ற தலைப்பில் நவம்பர் 25 முதல் 30 வரை முரளிஜி உபன்யாசம் செய்தார். தினமும் திரளான அன்பர்கள் கலந்து கொண்டனர். பூர்த்தியன்று நகரகீர்த்தனமும் இடம்பெற்று இருந்தது.

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT website: www.rajmanibuilders.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஹித ஸந்த்தாஸ் பாபாஜி- 3

சித்ரகூடத்து ஜகதேவ்தாஸ்ஜீ, ப்ருந்தாவனத்து ஸந்த்தேவ்தாஸ் பாபாவை பார்த்து, "என்னுடைய ஸேவை வெறும் பணத்தினால் மட்டும்தான். ஆனால் தாங்களோ உடலாலும் மனதாலும் ஸேவை செய்கிறீர்கள். நான் ஆட்கள் வைத்து ஸேவை செய்கிறேன். நீங்களோ உங்களையே ஸேவையில் ஈடுபடுத்திக் கொள்கிறீர்கள்". இதை கூறி மஹந்த் சிறிது நேரம் மௌனமாக இருந்து, பின் கூறினார், "தங்கள் ஸேவையில் இன்னொரு விசேஷமும் உண்டு. தாங்கள் ஸேவையில் ஏமாற்று உபாயங்களையெல்லாம் கையாள்கிறீர்கள். அது எனக்கு வராது!"

"அது தங்களுக்கு எப்படி வர முடியும்? அதை கற்க தர்மாத்மாவான ராமசந்திரப்ரபுவை ஆஸ்ரயிப்பதை விட்டு விட்டு, நந்தநந்தனனின் தாஸ்யத்தை ஏற்க வேண்டும். கண்ணனுக்கு ஸ்வபாவமாக ஸஹஜமாக உள்ள ஸம்பத்துக்களும், கலைகளும் ஸ்ரீராமருக்கு உண்டோ" என்றார் பாபா. இவ்வாறு ஹாஸ்யமாக சிறிது நேரம் கழித்த பின்னர் மஹந்தஜீ விடைபெற்றார். தன்னுடன் பாபாவின் ஸாதுஸேவையின் அழிக்கமுடியாத நினைவுகளையும் எடுத்துச் சென்றார்.

## ஸ்ரீஹம்ஸதாஸ் பாபாஜி மற்றும் ஸ்ரீகோபாலீபாயி -1

ப்ருந்தாவனத்தின் தோபிகலியில்(தெரு) ததியாகுஞ்சத்தின் ஒரு குடீரத்தில், ஸ்ரீகோபால்தாஸ் பாபா வஸித்து வந்தார். அவர் மிகவும் விரக்தியுடைய ப்ரபாவசாலியான மஹாத்மா. ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் ராமாயணம் மற்றும் பக்தமால் போன்றவற்றை மிகவும் அழகாக உபந்யாஸம் செய்வார். அவரது பேச்சில் ஆகர்ஷண சக்தியிருந்தது.

அவரது ப்ரவசனத்தை கேட்ட மாத்திரத்தில் வாழ்க்கையின் போக்கே மாறியவர்களின் எண்ணிக்கை

எண்ணிலடங்காதவை. பல ப்ரேதங்கள் கூட இதனால் உத்தாரணமாயின. தினமும் ப்ருந்தாவனத்தில் எங்காவது ஒரு இடத்தில் அவரது ப்ரவசனம் நிச்சயமாக நடக்கும்.

கோபால்தாஸ் பாபா தனது பார்வையை இழந்து விட்டிருந்தார். கதையின்பொழுது சிஷ்யர்கள் க்ரந்தத்தை படிக்க, பாபா விளக்கம் அளிப்பார். பல ஆபரணங்கள் அணிந்த 20-22 வயது மதிப்புள்ள ஒரு இளம் பணக்கார பெண், அவரது ப்ரவசனங்களுக்கு புதிதாக வர தொடங்கியிருந்தாள்.

ஒரு நாள் கதை முடிந்தவுடன் பாபா, கால்களில் சலங்கையணிந்திருக்கும் பெண், எந்த வீட்டை சேர்ந்தவள் என்று கேட்டார். அவள் அணிந்திருந்த சலங்கையின் ஒலியை கேட்ட மாத்திரத்தில், இதை பாபா கேட்டார். ஒருவர் பதில் கூறினார், "அவர்கள் ஹம்ஸராஜின் பத்னி". மறுநாள் கதை நடுவில் ஏதோ ஒரு ப்ரஸங்கத்தில், பாபா, "கஹனோ பேசோ ஸாது ஜிமாவோ, யஹ் தன்துக்கீ பாண்டோ ஜனம் ஜனம் கதையா ஹோகி, ராம் பஜோ ரீ ராண்டோ" என்று கூறினார்.

இதன் பொருள், "பெண்ணே ! நகையை விற்று ஸாது ஸேவை செய் ! இந்த உடல் துக்கத்தின் இருப்பிடம். ராம பஜனை செய்; இல்லையேல் கழுதையாகத் தான் பிறப்பாய்!" இதை கேட்டு அங்கிருந்த ஸ்த்ரீகள் சிரித்து விட்டார்கள். சிலரோ பாபாவிற்கு வயதாகி விட்டது. அதனால்தான் எல்லோரையும் திட்டுகிறார் என்றனர்.

ஆனால் உயர்ந்த ஸம்ஸ்காரங்கள் உடைய எந்த பெண்ணின் உள்ளிருக்கும் ஆன்மீக தணலை அந்தர்யாமியான பாபா எழுப்ப நினைத்தாரோ, அந்த பெண்ணின் ஹ்ருதயத்தை இந்த சொற்கள் ஊடுருவின. அவள் வீடு திரும்பியதும் தனது கணவனான ஹம்ஸராஜரிடம், "நான் தினமும் கதை கேட்கும் அந்த மஹானிடம் தீக்ஷை பெற்றுக் கொள்ளபோகிறேன். என் நகைகளை விற்று ஸாது ஸேவை செய்யப்போகிறேன். அழியும் இந்த உடலை விரக்தியுடன் பஜனையில் ஈடுபடுத்தி, எனது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கி கொள்ள போகிறேன். தாங்களும் இவ்வாறே செய்ய வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறேன்" என்றாள்.

(தொடரும்)

# மாலே மணிவண்ணா – 114

–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்



திருமாலை பற்றிய ஐந்தாம் (பரிபாடல் 13ஆம் பாடல்) பாடல் பொழிப்பின் தொடர்ச்சி.

### *பல்வேறு திருஉருவத்துடன் விளங்கும் ஒரு முதல்வன்*

திருப்பாற்கடல் நடுவே ஆயிரந்தலைகளை உடைய ஆதிசேடன் மேல் அறிதுயில் செய்யும் துளவ மாலை அணிந்த திருமாலும், படைவலியுடனே ஒழுக்கத்தைக் கடந்துவரும் வலிமிக்க போரைச் செய்யும் பகைவர் உயிரை அகற்றி அவர் மார்பை உழும் கலப்பைப் படை உடைய பலராமனும், பூமியானது நடுக்கம் அற அதனைக் கொம்பின் மேல் எடுத்துக் காத்தருளிய ஆதிவராகமும் ஆகிய மூன்று திருஉருவங்களாகப் பிரிந்து நலம் செய்யும் தனி முதல்வன் நீயே !

### *திருமாலைப் புகழ்தலும் வணங்குதலும்*

பெருமாளே ! நீ பாம்புக்குப் பகையாகிய கருடனைக் கொடியாகக் கொண்டாய் ; வேதத்தாற் கூறப் பெறும் நல்ல புகழை உடையாய் ; மேகம், காயம், பூ, கடல், இருள், நீலமணி என்ற ஐந்தையும் ஒக்கும் திருமேனியை உடையை ; அருளாற் பிறக்கும் நின்மொழி வலம்புரிச் சங்கின் முழக்கத்தையும் வேத முழக்கத்தையும் ஒத்திருக்கும் ; கோபத்தால் பிறக்கும் நின்மொழி மேகமுழக்கத்தையும் இடி முழக்கத்தையும் ஒத்திருக்கும் ; தோன்றியதும் தோன்றுகின்றதும் தோன்றுவதும் ஆகிய முக்காலங்களையும் கடந்து அக்காலங்கள் தாமே வந்து பொருந்திய தாள் நிழலை உடையாய் ; நின்னைத் தோத்திரம் செய்யும் அன்பர்கள் இருவினையும் இல்லாதவர் ஆவர் ; நீ காத்தலாகிய ஒரு தொழிலினிடத்தே, விருப்பம் பொருந்திய உள்ளம் உடையாய் ; நின் திருவடியும், கையும், கண்களும், திருவாயும் தாமரை மலரை ஒக்கும் ; நின் தோள்வளையும், திருஉந்தியும், வாகுவலயமும், திருத்தாளும், தோளும், பிடரியும்


பெரியன ; திருமார்பும், பின்புறமும் திருவுள்ளமும் பரியன ; நின் கேள்வியும் அறிவும் அறமும் நுண்ணியன ; யாகத்தின் பால் விருப்பம் உடையாய் ; போரின் பால் கொடுமை உடையாய் ; நீங்காத வலிமையையும், சினம் இல்லாமலே சிவந்த கண்ணையும் போர்செய்யும் சக்கரப் படையையும் உடைய செல்வனே ! செந்தீயை ஒத்த வெட்சிப் பூமாலையை இடைவைத்துக் கட்டின துழாய் மாலையை அணிந்துள்ள திருமார்பை உடைய பெருமானே !


நீ அத்தன்மைகளை உடையாய் என்று தியானித்து, முற்பிறப்புக்களில் யாம் செய்தவப்பயனால், உன் திருவடியைக் கையால் தொழுதோம் ; பலமுறை வணங்கி வாழ்த்தும் பேறு பெற்றேம் ; நாங்கள் மேலும் மேலும் ஆசைப்படுவது உன்னைத் துதித்தலும் வணங்குதலும் செய்தலையே ! அருள் புரிவாயாக !

பரிபாடல் 13 ஆகிய திருமால் பற்றிய ஐந்தாம் பாடல் நிறைந்தது

(தொடரும்)


**CHAITANYA MAHAPRABHU NAMA BHIKSHA KENDRA**
**NEW RELEASES - MADHURA GEETHAM VOL 13 & 14**



# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் – 11

சில வருடங்களுக்கு பின், பகேவாடியில் இருந்த பசவரின் தாய், தந்தையர் ஒரே நாளில் இறைவனடி சேர்ந்தனர். தீர்த்தயாத்திரை சென்ற நாகம்மாள் கணவன், இடையில் காபாலிகர்களிடம் மாட்டிக்கொண்டு தப்பி வந்திருந்தார். ஒரு நந்தன வருடத்தில் நாகம்மாளிற்கு ஒரு அழகிய ஆண் குழந்தை கிருத்திகை நக்ஷத்திரத்தில் பிறந்தது. இவர்தான் சென்ன பசவர். பசவர் போலவே கல்வியில் மிக சிறந்து விளங்கிய இவருக்கு பசவரே கல்வியை போதித்தார்.

கூடலசங்கமம் வந்து 12வருடமானபின், பசவரை தீர்த்த யாத்திரை சென்று வர பணித்தார் ஈசான்யர். ஈசான்ய குருவின் விருப்பப்படி, மக்களிடையே சிவ பக்தியை போதித்தவாறே, பல தலங்களுக்கும் புனித தல தரிசனம் செய்தார் பசவர். பல்வேறு மதத்தினரையும் சந்தித்தார். இந்த யாத்திரயின்பொழுது, மக்களின் அன்றாட பிரச்சனைகளில் இருந்து, பொருளாதார தேவைகள் வரை அனைத்தையும் நேரடியாக இருந்து பார்த்து அறிந்து கொண்டார். ஒவ்வொரு இடத்திலும் மக்களோடு மக்களாக இணைந்து அவர்களுக்கு தேவையான குடிநீர், மருத்துவம், சுகாதாரம், பொருளாதார தேவை என அனைத்து விஷயத்திலும் நல்ல ஆலோசனை தந்தவாறு இருந்தார் பசவர். ஈசான்யரின் ஆசிகளுடன் வந்த அவரது ஆலோசனைகளை கேட்ட மக்களுக்கு நல்ல பயன் இருந்தது. உழைப்பின்மையே பல பிரச்சனைகளுக்கு காரணம் என்பது பெரும்பாலான இடங்களில் அவர் உபதேசமாயிருந்தது.

கூடவே ஆன்மீகத்தின் பேரில் ஏமாற்றுவதை கடுமையாக எதிர்த்தார் பசவர். பக்த சரித்திரங்களையும் பக்தர்களின் பக்தி வசனங்களையும் மக்களிடையே எடுத்து சொல்வார். விழாக்காலங்களில் பக்த சரித்திர நாடகங்களை வைத்து கொள்வது பசவர் வந்தபின் வழக்கமாயிற்று. அடியார் சேவை,

லிங்க பூஜை கூடிய சிவபக்தியை சகலருக்கும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளை பொருட்படுத்தாது, அவர் உபதேசித்தார். இது பலருக்கு கோபத்தை கிளப்பியது. ஈசான்யரிடமே முறையிட, அவரோ, பசவரின் சீர்திருத்தங்களை ஆதரித்து, குறை சொல்பவரிடம் இருக்கும் குறைகளை பகிரங்கமாக கண்டித்தார்.

பசவரின் சீர்திருத்தங்களையும், அதனால் மக்கள் பல நன்மை அடைவதையும் பற்றி பிஜ்ஜாலனின் அரசில் கருவூல மந்திரியாக இருந்த பலதேவராசர் கேள்விப்பட்டார். இவர் பசவரின் சொந்த தாய்மாமன். அவர் ராஜா பிஜ்ஜாலனின் அனுமதியுடன், பசவருக்கு பல உதவிகளை தீர்த்த யாத்திரயின்பொழுதே ஏற்படுத்தி தந்தார். யாத்திரை முடிந்து பசவர் கூடலசங்கமம் திரும்பிய பின், ஈசான்யரை பார்க்க வந்தார் பலதேவராசர். அவர், தம் மகளை, பசவருக்கு திருமணம் முடிக்க ஆசைப்படுவதாக ஈசான்யரிடம் தெரிவித்தார். குருவும் சம்மதித்து, பசவரை கூப்பிட்டு விஷயத்தை சொன்னார்.

பசவருக்கு அதில் விருப்பமே இல்லை. "குருதேவா! தங்களுக்கு சேவை செய்தவாறு இருப்பதையே நான் விரும்புகிறேன்" என்றார். அப்பொழுதும் பசவரின் வாழ்வில் முக்கிய மாற்றத்தை தந்தவர் ஈசான்யர்தான். "பசவண்ணா! உனக்கு சிறு குடும்பம் கிடையாதுதான். உனக்கு, உலகம் என்கிற பெரிய குடும்பம் சொந்தமாக போகிறது. ஆனால், அதற்கு இந்த சிறிய பந்தம் உனக்கு தேவை. இதன் மூலம், உனது உபதேசங்கள் மக்களை சுலபமாக சென்றடையும். நான் சொல்வதை கேள்" என்று சொன்னார்.

நிர்வாகம் மட்டுமின்றி, மடத்தின் வரவு, செலவு கணக்கு, மடத்திற்கு வரவேண்டியதை வசூலிப்பது என எல்லாவற்றையும் பசவரையே செய்ய சொல்லுவார் ஈசான்யர். ராஜ சம்பந்தம் வந்தபின்தான், குரு தம்மை ஏதோ காரணமாக இவற்றை எல்லாம் செய்ய சொல்லி இருக்கிறார் என பசவருக்கு புரிந்தது. பசவர் திருமணத்திற்காக கூடலசங்கமத்தை விட்டு கிளம்பிய பின், எதற்கும் கலங்காத ஈசான்யர் அழுதார்.

(தொடரும்)

"மதுரமுரளி" சந்தா
5 ஆண்டு – ரூ 600
3ஆண்டு – ரூ 360
1 ஆண்டு – ரூ 120
For Details:
+91-44-24895875

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:
Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | ஜனவரி 22, பிப்ரவரி 6, 21 |
| ஜனவரி 1 | வேலூர் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை |
| ஜனவரி 8 | **ஏகாதசி**- பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் |
| ஜனவரி 11 | கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமார் ஜயந்தி விழா |
| ஜனவரி 12-20 | நாரத கானசபா, சென்னை |
| ஜனவரி 23 | குடியாத்தம் கோவில் கும்பாபிஷேகம் |
| ஜனவரி 27 | விருதுநகர் நாமத்வார் திறப்பு |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.